மத்திய கிழக்கில்
வேலைவாய்ப்பு
Drivers, Carpenters, Masons & Labouress கூலி ஆட்கள் உடனடியாகத் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்.

குட்வில் (T) ரவல்
Goodwill Travel
No. 635, ஆஸ்பத்திரி வீதி,
[சிங்கள பாடசாலை முன்பாக]
யாழ்ப்பாணம்.



★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/89-5/78

மலர்: 21 சித்திரை 25 ஜ-அகிர்: 10 இதழ்: 87

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 8-5-79



RECEIVED 1979-5-8 PERIODICALS DIVISION UNIVERSITY OF JAFFNA LIBRARY



யாழ். வைரமாளிகையினரின்
ஆதரவில் வானொலியில்
ஒலிபரப்பாகிய
'வரணியூரான்' குழுவினரின்
சண்டியன் சின்னத்தம்பி
யூலை மாதம் 6-ந் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்தில் மேடையேறுகிறது. பொது நிதிக்காக சண்டியன் சின்னத்தம்பியை மேடையேற்ற விரும்புவோர் தொடர்பு கொள்க:-
"வரணியூரான்"
C/O வைரமாளிகை,
79, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7036.


# யாழ். பொலிஸாரின் சட்ட விரோத நடவடிக்கைகள்!

## 'யோகேஸ்' ஆட்சேபம்

[யாழ்ப்பாணம்]

உள்ளூராட்சி மன்றத் தேர்தலையொட்டி யாழ். பொலிசார் சட்டவிரோத பாரபட்ச நடவடிக்கைளில் ஈடுபட்டுள்ளனர். இச் செயல்களை உடன் நிறுத்த நடவடிக்கை எடுப்பதோடு சம்பந்தப்பட்டவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன் யாழ். பொலிஸ் அதிபரைக் கேட்டுள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பாக அவர் பொலிஸ் அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:

யாழ். மாநகரசபைத் தேர்தலில் பொலிசார் சட்டவிரோதமாகவும், பாரபட்சமாகவும் நடப்பதை ஆட்சேபித்து உடன் நிவாரணம் கேட்கிறேன்,

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரசாரத்திற்கான துண்டுப் பிரசுரங்களை அவர் அவர் வீட்டிலே வாக்காளருக்குக் கொடுத்துவந்த ஒரு இளைஞரை சட்ட விரோதமாக கைது செய்தார்கள் பின் எனது தலையீட்டினால் அவரைப் பிணையில் விட்டு விட்டார்கள்.

எமது அபேட்சகர்களில் ஒருவரான சட்டத்தரணி ஜனாப் ஆர். எம். இமாம் என்பவரின் வீட்டிற்குள் புகுந்து வாக்காளர்களுக்குக் கொடுக்கவிருக்கின்ற துண்டுப் பிரசுரக் கட்டை பொலிசார் கைப்பற்றிச் சென்றார்கள். இதுவும் ஒரு சட்டவிரோதச் செயல். மேற்படி இரு செயல்களும் பாரபட்சமாக தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர்களுக்கு எதிராக நடத்தப்பட்டுள்ளது. பொலிசார் நியாதிலமாக தேர்தலில் தலையிடுகிறார்கள் என்பதனை இது காட்டுகிறது. ஆகவே இதுபற்றி சம்பந்தப்பட்ட ஐ. தே. கட்சி அபேட்சகரின் துண்டுப் பிரசுரம் ஒன்றையும் ஜனாப் இமாமுடைய துண்டுப்பிரசுரம் ஒன்றையும் இணைத்து அனுப்புகிறேன்

தமிழர் விடுதலை கூட்டணிக்கு எதிராக பொலிசார் அரசியலில் தலையிட்டு பாரபட்சமாக சட்டவிரோதமாகவும் நடவடிக்கை எடுப்பதை கடுமையாக ஆட்சேபிக்கிறேன். இதுபற்றி குறித்த பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் படியும் கைப்பற்றப்பட்ட துண்டுப் பிரசுரத்தை உடன் திருப்பிக் கொடுக்கும் படியும் கேட்டுக்கொள்கிறேன்.

இக்கடிதத்தின் பிரதி ஒன்று உதவிப் பொலிஸ் மா அதிபர் திரு. சுந்தரலிங்கத்திற்கும் அனுப்பட்டுள்ளது.

[ஈ]


மகாராஜா முதலீட்டு
(வரையறுக்கப்பட்ட) நிதிநிறுவனம்

உங்கள் பணத்திற்கு அதிகவட்டி வழங்கும்
ஒரே நிதி நிறுவனம்
உங்கள் பணம் வீட்டில் தேங்காமல்
பன்மடங்காகப் பெருக இன்றே முதலீடு
செய்யுங்கள்.

18 வீதம் வருடமொன்றுக்கு மாதாந்த வட்டி

2 வருடங்களுக்கு மாதாந்த வட்டி 20 வீதம்

24 வீதம் 2 வருடங்களுக்கு கால முதிர்வு வட்டி

குறைந்த
பட்சவைப்பு
ரூபா 500

விபரங்களுக்கு:-

மகாராஜா முதலீட்டு
(வரையறுக்கப்பட்ட) நிறுவனம்
121, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி 418
தலைமை அலுவலகம், 54, பாங்ஷால் வீதி, கொழும்பு-11


ஊழியர் சம்பளப் பிரச்னை:

# பனாமா கப்பல் கொழும்பில் தடுத்து ஏலவிற்பனை!

[கொழும்பு]

கப்பல் மாலுமிகளின் சம்பளப் பிரச்னை சம்பந்தமாக 1977ம் ஆண்டு ஆனி மாதம் கொழும்பு உயர்நீதிமன்றத்தினால் தடுத்துவைக்கப்பட்ட சரக்குக்கப்பலான 'எம். வி, பலாக்' என்னும் பனாமியக் கப்பல் உயர்நீதிமன்ற உத்தரவின்பேரில் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டது. 88 லட்சம் இலங்கை ரூபாய்க்கு இக்கப்பல் விலைபோனது.

கப்பல் காப்டனும் 18 மாலுமிகளும் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணி க. பூபாலசிங்கம் மூலமாகச் செய்துகொண்ட மனுவைத் தொடர்ந்து உயர்நீதிமன்றம் இக்கப்பலை உலகநாடுகளிலிருந்து கேள்விப்பத்திரம் கோரி பகிரங்க ஏலத்தில் விற்கும்படி உத்தரவிட்டிருந்தது.

இக்கப்பலைக் கொள்வனவு செய்துகொண்ட சிங்கப்பூர் கம்பனியான 'ஏ, வலிபோய் அன்ட் சன்ஸ்' தனது கம்பனிப் பிரதிநிதியான திரு. க. பூபாலசிங்கம் மூலமாக பிரதம சுங்க அதிபரிடம் பணத்தைச் செலுத்திக் கடந்த வியாழக்கிழமை கப்பலைப்பொறுப்பேற்றுக்கொண்டனர்

இலங்கைத்துறைமுகங்களில் கடந்தவருடம் நீதிமன்ற உத்தரவின்பேரில் தடுத்துவைக்கப்பட்ட ஐந்து கப்பல்களில் விற்பனை செய்யப்பட்ட இரண்டாவது கப்பல் இதுவாகும். இதற்கு முன்னர் 'எம். வி விவா' என்னும் கப்பல் இதே கம்பனியினரால் கடந்தவாரம் கொள்வனவு செய்யப்பட்டது.

[ஈ]

# சஞ்சய் மீண்டும் கைது!

லக்னோ, மே 7

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் புதல்வர் சஞ்சய் காந்தி நேற்று மீண்டும் கைது செய்யப்பட்டார்.

அவருடன் அவரது ஆதரவாளர்கள் 200 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லக்னோவில் தடைச்சட்டத்தை மீறியதை அடுத்தே காந்தியும் அவரது ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டனர்.

சஞ்சய் காந்தியும் அவரது ஆதரவாளர் 300 பேரும் கடந்த வாரம் பொலிசாருடன் மோதியபோது கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டது தெரிந்ததே

(இ)

# இடி அமினின் மற்றுமொரு முயற்சி தோல்வி!

மாஸ்கோ, மே 7

உகண்டாவின் முன்னாள் அதிபர் ஜெனரல் இடிஅமின் லிபியாவிலிருந்துகொண்டு மாஸ்கோவில் பயிற்சி பெற்று வரும் 200 உகண்டா கடேட் வீரர்களைக் கொண்ட கூலிப் படையைத் திரட்ட முயற்சித்து, தோல்வி அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 26-ந் திகதி மாஸ்கோவிலுள்ள முன்னாள் உகண்டா தூதுவருடன் தொடர்புகொண்டு படை திரட்டுவது குறித்து ஆலோசனை நடத்தியதாகவும் உகண்டாவின் புதிய அரசு மாஸ்கோவின் முன்னர் இருந்த உகண்டா தூதுவரை திருப்பி உகண்டாவுக்கு அழைத்ததைத் தொடர்ந்து இடிஅமினின் முயற்சி தோல்வி அடைந்ததாவும் தெரிவிக்கப்பட்டது.

# ராஜராஜேஸ்வரன் மனு மீது நீதிமன்றம் நடவடிக்கை

[கொழும்பு]

எதிர்வரும் 19-ந் திகதி நடைபெறவிருக்கும் யாழ் மாநகரசபைக்கான தேர்தலைத் தடைசெய்ய வேண்டும் என்றும், புதிய அறிவித்தலின் பேரில் யாழ் மாநகரசபைத் தேர்தலை நடாத்த வேண்டும் என்றும் கோரி நல்லூரைச் சேர்ந்த சட்டத்தரணி திரு. ராஜராஜேஸ்வரன் தங்கராஜா தாக்கல் செய்திருந்த ரிட்மனுமீது பிரதிவாதிகள் தேர்தல் ஆணையாளர், சட்டமா அதிபர், யாழ். உதவித் தேர்தல் அதிகாரி ஆகியோரை இம்மாதம் 15-ம் திகதி ஆஜராகுமாறு அப்பீல் நீதிமன்றம் நோட்டீஸ் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த 30-ம் திகதி இவ்வழக்கு விசாரணைக்கெடுக்கப்பட்டபோது பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் உத்தரவு வழங்குவதற்கு முன்னர் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவிரும்புவதாக அப்பீல் நீதிமன்றம் தெரிவித்

[6-ம் பக்கம் பார்க்க]

# சாதனை வீரருக்கு

புதிய உலக சாதனைகளை ஏற்படுத்துவதில் அல்லது சாதனை முயற்சியில் ஈடுபடுவோருக்கு ஒரு சிறிய கோரிக்கை.

உலக சாதனைகளை நிலைநாட்டும்போது ஒரு அமைப்பின்மூலமாக, உரிய முறையில் நடுவர் குழுவை அமைத்து, சம்பந்தப்பட்ட உத்தியோகபூர்வமான அதிகாரிகளின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பின் அனுமதியுடன் ஆரம்பிக்கப்படும் உலகசாதனைச் செய்திகளை மட்டுமே 'ஈழநாடு' பத்திரிகை இனிமேல் வெளியிடும் என்பதையும், சாதனைப் பயிற்சிகளையோ அல்லது தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படும் சாதனை பற்றிய செய்திகளையோ 'ஈழநாடு' இனிமேல் வெளியிடமாட்டாது என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

— ஆசிரியர்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

உசன் செ ந் ப லி றோட்டில் மில் முன்பாகவுள்ள செம்பாடு என்னும் 8¼ பரப்புக்காணி கிணற்றுடன்விற்பனைக்குண்டு. கா. பொன்னம்பலம்,"ஆனந்த மாளிகை", சரவெட்டி. 2373

### தவறிவிட்டது

3-5-79ந் திகதி வியாழக்கிழமை துனுக்காயிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பஸ்ஸில (இல 23 சிறி 9118) அடையாள அட்டை, காணியின் பெர்மிட் உறுதி உட்படவேறு பொருட்களும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். நா. நடராசா, ஆஸ்பத்திரி வீதி, . மண்டைதீவு. 2377

## லொறிக்கு பெயின்ற் அடிக்க கேள்வி கோரல்

எமது சங்க இசுசு லொறிக்கு பெயின்ற் அடிப்பதற்கு கேள்வி கோரப்படுகின்றது. சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து 15-5-79க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம். பூசும் பெயின்ற், எழுத்துக்கள் போன்ற விபரங்களை சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்,
மானிப்பாய் பரிஷ்
ப. நோ. கூ. சங்கம்,
மானிப்பாய்.

2376


# வடஇலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள் 1978

## மூன்றும் பகுதி

சாதாரணசித்தி

**மிருதங்கம்:**

இராசையா திருமாவளவன், விசாகப்பெருமாள் பாலமுரளி, பத்மநாதன் சர்வானந்தர், நாகலிங்கம் கருணாகரர், சண்முகலிங்கம் தேவகுருபரன், சண்முகலிங்கம் குருபரன், கணபதிப்பிள்ளை கணநாதன், குமரையா ராஜ்குமார், அந்தோனிப்பிள்ளை பாரதிராஜ், பஞ்சாட்சரசர்மா சோமசேகரசர்மா, சபாநாயகம் ரவிச்சந்திரன், வில்பிறெட் றெக்ஸ் றேமண்ட், அரியரட்ணம் பார்த்திபன், பஞ்சாட்சரம் வாசவன், பண்டிதவரதன் கோகுலன், இரத்தின ஜோதி மயூரன், விசுவலிங்கம் பரணீதரன், தருமராசா இரமணன், இராசரத்தினம் பிரேமச்சந்திரன், குமாரசாமி குமரேந்திரன்.

## நான்காம் பகுதி

முதலாம் பிரிவு

**மிருதங்கம்:**

f சதாசிவஐயர் பாலச்சந்திரன்.

இரண்டாம் பிரிவு

f இரத்தினம் முருகன், விஜயசுந்தரம் டினேஷ் ஹன்ஸ்ராஜ், f திருச்செல்வம் இராஜ்குமார், ஏரம்பமூர்த்தி செந்தில்குமரன். f செல்வி கானகோகிலம் சிவசொருபநாதபிள்ளை, f சிவஞானம் ஜெகதீசன், f வாஞ்சிநாதஐயர் அகிலன்.

சாதாரண சித்தி

**மிருதங்கம்:**

கந்தையா சத்தியநாதன், சோமசுந்தரம் சேகரன், பாலச்சந்திரன் கௌரிசங்கர், பாலசுப்பிரமணியசர்மா யோகானந்தசர்மா, நாராயணபிள்ளை சுஜீதன், பாலச்சந்திரன் சயந்தன் கிறகரி யஸ்ரின் ஜெகதீஸ்வரன், குமாரசந்திரன் நந்தகுமார், அனவரதவிநாயகமூர்த்தி சிவானுசாந்தன், பத்மநாதன் குழந்தைவேல், கனகரத்தினம் யோகானந்தன், தங்கராசா நவநீதராசா, சுப்பிரமணியம் மணிவண்ணன், கந்தையா ஆனந்தநடேசன், இராமலிங்கம் துளசிராம், சிவபாதசிங்கம் தவேந்திரன், செல்வி சிவவனிதா சதாசிவம், செல்வி ரேணுகாவல்லிபுரநாதன், மண்டலேஸ்வரன் இராஜேஸ்வரன், நடராசா இரகுபதி, இராசரத்தினம் ஸ்கந்தராஜன்,

## ஐந்தாம் பகுதி

முதலாம் பிரிவு

**மிருதங்கம்:**

f பரமானந்தன் பகீரதன், o சிவகுரு விவேகானந்தன்.

இரண்டாம் பிரிவு

**மிருதங்கம்:**

வைரவப்பிள்ளை வேணிலான்

சாதாரண சித்தி

**மிருதங்கம்:**

டானியல் வரதராசா, பாலசுந்தரம் முரளிதரன், கிருஷ்ணமூர்த்தி உதயகுமார், கந்தசாமி வசந்தராஜ்.

மீள் நூனசித்தி

**மிருதங்கம்:**

கனகசபை சிவகுமார், தனம்

(6ம் பக்கம் பார்க்க)

# இன்றைய பலன்

சித்திரைமாதம் 25-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(8-5-1979)

**மேடம்:** நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும், வியாபாரிகளாயின் பங்காளிகளிடம் பகைத்துக் கொள்ளவேண்டாம், பொருட்செலவும் உண்டு.

**இடபம்:** கலைஞர்கள் போற்றப்படுவர், சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்புக் கிடைக்கலாம், குருவின் ஆசி தாராளமாகக் கிடைக்கும்,

**மிதுனம்:** வியாபாரத் துறையில் விருத்தி உண்டு, செய்தொழில் சிறப்படையும், வாழ்க்கையில் சுமுகமான நிலை தென்படும்.

**கடகம்:** பொருள்வரவு திருப்திகரமாக இருக்கும், புத்திரவழியால் புகழும் கிடைக்கும், வணிகர்களுக்கு வியாபாரத் துறையில் வெற்றி கிடைக்கலாம்.

**சிங்கம்:** சிந்தனையின் தாக்குதல் உடல்நிலையைப் பாதிக்கும், மனதில் அமைதி குன்றும், திடீர் முடிவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். தொழில் துறைகளிலும் தொல்லைகளுக்கும் இடமுண்டு.

**கன்னி:** எவ்விடத்திலும் நன்றாக ஆலோசித்த பின்பே முடிவெடுக்கவும், முகமன் கூறுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

**துலாம்:** கனிவான நினைவுகள் தலைதூக்கும், காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு, கனிவான பேச்சின் மூலம் கடினமான காரியத்தைக்கூடச் சாதிப்பீர்கள், சுபதினம்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குறைகேட்க நேரிடும், மறைமுகமான காரியமொன்று இன்று அம்பலமாகலாம், சிலருக்கு விரக்தி மனப்பான்மை தென்படும், பொறுமையுடன் நடப்பது நன்று.

**தனுசு:** அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும், வாகன சுகத்துடன் வாழ்க்கை நலனுமுண்டு.

**மகரம்:** உள்ளம் இன்பத்தால் துள்ளும், புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும், நீண்டநாள் பிணி நிவிர்த்தியாவதற்கும் இடமுண்டு.

**கும்பம்:** வாய்வுக் கோளாறினால் வேதனைப்படுவீர்கள், உணவு விடயத்தில் அதிக கவனஞ் செலுத்தவும், எதிரிகளின் கோழைத்தன நடவடிக்கை உங்கள் அமைதியைக் குலைக்கலாம்.

**மீனம்:** புதுமையான எண்ணங்களினால் உந்தப்படுவீர்கள், உடலில் தனி உற்சாகம் பிறக்கும், மற்றவர்கள் உங்கள் ஆற்றலை மெச்சுவார்கள், நல்ல நாள்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# சந்தேக நபர்களுக்குபிணை

(புலோலி)

புலோலி முதலாங்கட்டையடி வயோதியமாதுவின் மர்மக் கொலை சம்பந்தமாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த மூன்று சந்தேக நபர்களும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே ஞானச்சந்திரன் முன்னிலையில் இச்சந்தேக நபர்கள் மூவரும் ஆஜர் செய்யப்பட்டபோது, இவர்களைத் தலா 3,000 ரூபா பிணையில் செல்ல நீதவான் அனுமதியளித்தார். (அ)


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட மன்றம்

வழ இல. MB/57
முத்துத்தம்பி செல்வநாயகம்,
மானிப்பாய் —வழக்காளி

எதிராக
1. கணபதிப்பிள்ளை பரசுராமரும்,
2. பெண் சொர்ணமும் இருவரும்,
தற்பொழுது லோட்டன் றோட்,
மானிப்பாய். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் MB/57ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1979ம் ஆண்டு வைகாசி மாதம் 29-ம் திகதி செவ்வாய்க்கிழமை (29-5-1979) காலை 10-30 மணிக்கு ஏலவிற்பனையை நடாத்த நியமித்துள்ளேன்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 9565/-யும் மேலும் 7,000/- ரூபாவுக்கு வருட மொன்றுக்கு நூற்றுக்கு 10% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1976ம் ஆண்டு பங்குனி மாதம் 31ந் திகதியிலிருந்து தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை வழக்குச் செலவு ரூபா 621/25 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று மானிப்பாயிறை "மன்று றெல்லியும் தேவலா தேவன் சீமாவும் வடக்கு குஞ்சன் ஆனைப்பந்தியும்" நில பர. 7 ஆட்சிப்படி நில பரப்பு 8 இதில் வடபுறமாக அளந்து எல்லை போட்டபடி நிலப்பரப்பு மூன்று (நில பர. 3) கல்வீடும் கிணறும் மற்றும் கட்டிடங்களும் மேற்கெல்லைக் கிணற்றுப் பங்கும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு பொன்னர் அரியகுட்டிக்கும் மறுபேருக்குமுரிய வாதனம் வடக்கும் மேற்கும் தம்பையா நாகையாவினுதனம். தெற்கு கையொழுங்கை முகப்பும் ஆறுப்பிள்ளை ஜெயரத்தினசிங்கம் பெண் நாகம்மாவினுதனம் இதடங்கலும் பதிவு E 460/60.

சி. செ. பாலசிங்கம்,
[கொமிஷனரும் மதிப்பாளரும்]
அராலிவடக்கு,
வட்டுக்கோட்டை, 3-5-1979. 2380

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ். மாவட்ட நீதி மன்றத்தில்

வழ: இல ஈடு / 661
(1) அந்தோனிப்பிள்ளை அல்பிறட்டும்
(2) பெண் மேரி எமிலியா, இருவரும்
கரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறை —வழக்காளிகள்

எதிராக
(1) சின்னத்தம்பி திருநாவுக்கரசும்
(2) பெண் சாவித்திரியும் இருவரும்
பாலாவி கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை.
—எதிராளிகள்

யாழ். மாவட்டநீதி மன்றத்தில் M B 661-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1979-ம் ஆண்டு வைகாசி மீ 30-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் (1979-05-30) அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 3400/-ம் 1977-ம் ஆண்டு மார்கழி மாதம் 6-ந் திகதி தொடக்கம் 1978-ம் ஆண்டு ஆடி மாதம் 14-ந் திகதிவரை ரூபாய் 2000/-க்கு 12 வீதவட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கு நூற்றுக்கு 5 வீதம் ஒருவருடத்துக்கு சட்டவட்டியும், வழக்குச் செலவு ரூபா 571 சதம் 85. (இதில் நடைபெற்ற செலவு ரூபா 339-00 நடைபெறவேண்டிய செலவு ரூபா 138-05 மேலதிக சமயா சமயச்செலவு ரூபா 94-80 எதிராளிகள் வழக்காளிகளுக்கு கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று கரம்பன் இறை; பாலாவி நெ நில பர. 65¾ இதற்கு நெ பர. 74½ இதில் கிழக்குப்பக்கமாகவும் மேற்குப்பக்கமாகவும் அறுதி விற்றதும் சீதனம் கொடுத்துமான நெ பர. 50 குளி 7 நீக்கி மிகுதி நெ பர. 18 இதில் மேற்குப்பக்கமாக நெ பர. 8 எட்டும் கிணறும் வீடும் மற்றும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு, சூசைப்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை இராசதுரையினுதனம், வடக்கு. இக்காணிக்கும் இதன் மேற்கெல்லை காணிக்கும் பொதுவாக விடப்பட்ட ஒன்பதடி (9) அகல ஒழுங்கை நிலம், மேற்கு செபஸ்திய ம்பிள்ளை பெண் லூர்துற்திருவினுதனம், தெற்கு அல்பிறட் வஸ்தியாம்பிள்ளையினுதனம் இதடங்கலும் இன்னும் முழு ஆதனத்திலும் வடக்குப் பக்கமாகத் தன்னிலத்தில் விடப்பட்ட வழிபாதையால் கிழக்கேயிருக்கும் றோட்டுக்கு போக்குவரவு செய்யும் வழிப்பாதையுரித்தும்

ஏ. ப. பி. எதிர்மன்னசிங்கம்,
வெந்தீஸ் கொமிஷனர்
107, மெயின் வீதி
யாழ்ப்பாணம். 2-04-79. 2378

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம் ஈடு/468
செல்லப்பா மகள் வாலாம்பிகை
கொல்லங்கலட்டி
தெல்லிப்பழை
வழக்காளி

எதிராக
செ[illegible]ன்னையா கைம் பெண் அன்னம்மா
மாம்பிராய்
காங்கேசன்துறை.
எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்கு கிடைத்த நீதி மன்றக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனத்தை 1979ம் ஆண்டு ஆனி மாதம் 14ம் திகதி (14-6-1979) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்த ஆதனத்திற்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிக்கு ரூபா 14,412/-வும் மேலும் ரூபா 7500/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 14 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1977ம் ஆண்டு பங்குனி மாதம் 14-ம் திகதியில் இருந்து தீர்வைத் திகதியாகிய 1977ம் ஆண்டு ஆவணி மாதம் 8ம் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் வழக்கு செலவு ரூபா 706-40 கொடுக்கவேண்டியிருப்பதாலும், இத்தொகையில இருந்து 5000/- கழித்து அறவிடவும்.

### குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக்கோவிற்பற்று தையிட்டி இறை "பறனுவளை" நில. பரப்பு (1¾) ஒன்றே முக்காலும் வீடும் கிணறும், இதற்கு எல்லை கிழக்கு முதலியினன் பெண் இன்னட்பிள்ளையினுதமும் வடக்கு தெரு மேற்கு மாரிமுத்து மாணிக்கவாசகரின் ஆதனம் தெற்கு கந்தர் சித்தனுக்கும் பங்காளருக்குரிய ஆதனம் இதடங்கலும்.

சி. ஆ. த. வடிவேலு J. P.
நீதிமன்ற விற்பனை
ஆணையாளரும், விலைமதிப்பாளரும்
"வடிவேல் உதயம்"
காங்கேசன்துறை வீதி
கோண்டாவில்
16-4-1979 379

ஈழநாடு
The Eelanaadu

## வேலை நீக்க உத்தரவு

தமிழ்ப் பகுதிகளில் பணியாற்றி வரும் விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர்களுக்குச் சிங்களத் தேர்ச்சி அவசியமில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருந்தும் சிங்களத் தேர்ச்சிபெறுமைக்காக விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர் இருபத்தேழு பேருக்கு வேலை நீக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது.

தமிழ்ப் பகுதிகளில் பணியாற்றும் விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர்களுக்குச் சிங்களத் தேர்ச்சி அவசியமில்லை என்று கடந்த மார்ச் மாதம் 10ந் தேதி ஜனாதிபதி கூட்டிய ஒரு மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இம் மகா நாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், கிராமிய தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சர் திரு. செள. தொண்டமான் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி கூட்டிய மகாநாட்டில் மேற்கொண்ட முடிவுக்கு மாறாக விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர் இருபத்தியேழு பேருக்கு வேலை நீக்க உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறதென்றால் இது தீர ஆராயப்பட வேண்டிய விஷயம்.

மகாநாட்டில் தீர்மானித்த முக்கியமான ஒருமுடிவு, சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அறிவிக்கப்படாமலிருக்க முடியாது. அந்த மகாநாட்டில் சம்பந்தப்பட்ட அமைச்சரும் கலந்து கொண்டிருக்கிறார்.

அப்படியிருந்தும் தீர்மானத்துக்கு மாறாக வேலை நீக்க உத்தரவு வழங்கப்பட்டிருந்தால் அரசினதும் அமைச்சினதும் தீர்மானங்களுக்கு எதிராக அதிகார வர்க்கத்திலுள்ள ஒருபகுதி செயல்படுகிறதா என்ற சந்தேகம் எழுவது இயல்பு.

அதிகார வர்க்கத்திலுள்ள சிலர் அரசின் கொள்கைக்கு மாறாகச் செயல்படுகிறார்களென்று சில அமைச்சர்களே பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருக்கின்றனர். அரசின் கொள்கையை ஏற்றுச் செயல்படுத்த விரும்பாதவர்கள் அரசாங்க சேவையிலிருந்து வெளியேறலாமென்று கூட சில அமைச்சர்கள் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தனர்.

அரசியலமைப்பில் தமிழ் மொழிக்கு உரிமை அளிக்கப்பட்டிருந்தாலும் அதைச் செயல்படுத்துவதில் தான் தமிழ் மக்களின் கஷ்டங்கள் நீங்க முடியும். அரசாங்கத்தின் கொள்கையையும் திட்டங்களையும் செயல்படுத்துவது அரசாங்க சேவையிலுள்ளவர்களின் பொறுப்பும் கடமையுமாகும். அரசின் கொள்கைக்கு மாறாகச் செயல்படுபவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் அரசு தனது இலட்சியத்தை அடைய முடியாது.

சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாக வேலை நீக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ள விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர்கள் விஷயத்தில் பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சு உடன் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். இது போன்ற சம்பவங்கள் இனியும் நிகழாதவாறும் அமைச்சுக்கள் கவனிக்கவேண்டியதும் அவசியமாகும்.

# திரு. செல்வநாயகம் காட்டிய வழியை

## இன்றைய தலைவர்கள் பின்பற்ற வேண்டும்

அரசாங்கக் கட்சியும் அவர்களுடைய தலைவர்களும், சிங்கள மக்கள் இலங்கையை பிரிவினைசெய்ய ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்றும் தங்களுடைய கட்சியும் ஒப்புக்கொள்ள மாட்டாது என்றும் சொல்லி வருகிறார்கள். அதே நேரத்தில் பிரிவினையை தவிர்த்து வேறு ஏதும் விஷயங்களை தமிழ் மக்கள் கேட்டால் அவைகளைப் பற்றி தாங்கள் மிகக் கவனமாய் யோசிப்பார்கள் என்று அவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள் அப்படியே பொதுவாக சிங்கள மக்களும் அவர்களைச் சேர்ந்த அரசியல் கட்சிகளும் சொல்லிவருகிறார்கள். இதே நேரத்தில் தமிழர் விடுதலை கூட்டணி என்ற பெயரை வழங்கி வரும் இயக்கத்தின் கட்சித் தலைவர்கள் பிரிவினை விஷயத்தைப் பற்றி தாங்கள் அரசாங்கத்துடன் பேச ஆயத்தம் என்று சொல்கிறார்கள். என்றாலும் அப்படிச் சொல்லி வரும் பொழுது அரசாங்கக் கட்சியினர் தமிழ் மக்கள் உருத்துக்களைப்பற்றி என்ன அபிப்பிராயம் வைத்திருக்கிறார்கள் என்பதை வெளிப்படையாக சொல்ல வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறார்கள் இதே காலத்தில் த. வி. கூட்டணி இயக்கத்துடன் தொடர்பு வைத்திருக்கின்ற பல தமிழர்களும் பத்திரிகைகளும் அரசாங்கம் வட்ட மேஜை மாநாடு ஒன்று கூட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் எடுத்துப் பார்க்கின்ற பொழுது த. வி. கூட்டணித் தலைவர்களும் மற்றும் தமிழ் மக்களும் தாங்கள் என்ன தேவையென்பதை எழுத்து மூலம் அரசாங்கக் கட்சிக்கு அறிவிப்பது பொருத்தமாகும். அப்படித் தெரிவித்தால் தமிழருக்கு ஒரு நட்டமும் வராது லாபம் வருமென்பதைப்பற்றி சொல்லவும் முடியாது.

தற்பொழுது யாழ்ப்பாண மாவட்ட அமைச்சின் காரியதரிசியாய் அரசால் நியமிக்கப்பட்டிருக்கும் திரு யோகேந்திரா துரைசுவாமி அவர்கள் காரியதரிசியாய் வைக்கப்பட்டதுபற்றிகூட தலைவர்கள் எழுத்து மூலம் அரசாங்கத்திற்கு ஆட்சேபனை செய்து யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. எல். பெர்ணண்டோவை அந்த ஸ்தானத்துக்கு நியமிக்கும்படி கேட்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல பல உத்தியோகங்களுக்கு குறிப்பிட்ட பேர்களை நியமிக்கும்படி தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்கள் அரசாங்கக் கட்சியிலிருக்கும் மந்திரிமாரை கண்டுபேசி அநுகலமும் அடைந்திருக்கிறார்கள். வேறு விஷயங்களைப் பற்றியும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களையும் மந்திரிமாரையும் அரசாங்க உத்தியோகஸ்தர்களையும் கண்டுபேசி இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படி இருக்கும் பொழுது தமிழர் உருத்துக்களைப்பற்றி தமிழ் கட்சிகளும் தமிழ் மக்களும் கூட்டணி உட்பட அரசாங்கத்திற்கு எழுத்தில் கொடுப்பது பாதகம் செய்யமாட்டாது.

இந்தியப் பிரதமர் திரு தேசாயும் மற்றும் சில இந்தியத் தலைவர்களும் தாங்கள் இலங்கைப் பிரிவினைக்கு சம்மதப்படார்கள் என்று கூறியிருந்தார்கள். அப்படிக் கூறியிருந்தாலும் எங்கள் மதிப்புக்குரிய தலைவர்கள் இந்தியாவிற்குச் சென்று இந்தியப் பிரமுகருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள் இந்திய பிரமுகருடன் இந்தியாவிற்குச் சென்று பேச்சுவார்த்தை நாடாத்திய பெரியார்கள் இலங்கையிலிருக்கும் சிட்கள முஸ்லிம் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துதல் இல்லாவிடில் எழுத்தில் தேவைகளைப் பற்றி விளக்குதல் பாதகஞ்செய்ய மாட்டாது என்று தோன்றுகின்றது அந்நியநாட்டுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்ற பெரியோர்கள் எங்கள் நாட்டிலிருக்கும் மற்றும் சமூகத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தாமல் இருப்பது. இல்லாவிடில்

[5ம் பக்கம் பார்க்க]

-- எஸ். சிவசுப்பிரமணியம் --

(ஓய்வுபெற்ற சட்டத்தரணி)

## நாடு நடப்பு

யாழ்ப்பாண நகரிலுள்ள 'பெயின்ற்' கடைகளில்சென்ற சில தினங்களாக நல்ல வியாபாரம் என்று என் நண்பரொருவர் சொன்னார்.

சில தினங்கள் என்று சொல்கின்றீரே, சில வருடங்களாகவே இங்கு புதிய புதிய கட்டிடங்கள் எழுந்து வருவதால் பெயின்ற் கடைகளுக்கும் வியாபாரம் இருக்கத்தானே செய்யுமென்றேன்.

கட்டிடங்களைப்பற்றி ஏன் சொல்கிறீர்! யாழ். நகரிலுள்ள தார்றோட்டுக்களையெல்லாம் நீர் சரியாகப் பார்க்கவில்லையாக்கும். யானையென்ன சைக்கிளென்ன, உதயசூரியன் தானென்ன எல்லாம் வீதிகளில் கிடக்கின்றன என்றார் நண்பர்

அது மட்டுமா அழகான எழுத்துக்களில் வேட்பாளர்களின் பெயர்கள், புள்ளடிகள் அம்புக் குறிகள் இப்படி வீதியெங்கும் தேர்தல் அலங்காரக் கோலங்கள்.

சும்மா சொல்லப்படாது. கைதேர்ந்த ஓவியர்கள் யாழ்ப்பாணத்தில் இப்போது பலர் இருக்கின்றனர்.

வீதிகளில் மட்டுமா வீட்டுச் சுவர்களிலும் கதவுகளிலும் கைவண்ணங்களைக் காட்டியிருக்கின்றனர்.

இந்த நாட்களில் அரைகுறை ஆங்கிலம் படித்தவர்கள்தான் யாழ்ப்பாணத்தில் அதிகம் என்பதையும் சிலர் எழுதிய ஆங்கில வாசகங்கள் பறைசாற்றுகின்றன.

தார்றோட்டுகளில் அழகான சின்னங்களையும் எழுத்துக்களையும் கெட்டியான திந்தையில் எழுதுவதனால்மழையிழுந்ததும் சிறுகற்களாகக்கிளம்பும் வீதிகள் சிறிது பாதுகாக்கப்படலாம். இதேபோல் மேடும் பள்ளமுமாக கிடக்கும் வீதிகளையும் செப்பனிட்டுப் புதிதாகத் தார் ஊற்றி கெட்டியான திந்தையில் பெரிய அளவில் சின்னங்களை எழுதினால் வீதிக்கு இன்னும் வலுவேற்படலாம். இப்படிச் செய்யும் கட்சிகளுக்கு அதிகவாக்குகளும் கிடைக்கலாம்

ஃ ஃ ஃ

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பிரசாரக்கூட்டங்கள் ஆரம்பமாகிவிட்டன.

சில தினங்களுக்குமுன் ஒரு தேர்தல் பிரசாரக்கூட்டம் நடந்தது. மறுநாள் அக்கூட்டத்துக்குச் சென்ற ஒருவரைப் பார்த்து வேறொருவர், "கூட்டத்தில் என்ன பேசினார்கள்?" என்று கேட்டார் அதற்கு அவர் சொன்ன பதில்-

மாற்றுக்கட்சி செய்யாதவைகளைப் பற்றியெல்லாம் பேச்சாளர்கள் ஒருவரின் ஒருவராக வன்மையாகக் கண்டித்துப் பேசினார்கள் ஆனால் தாங்கள் "செய்யவிருப்பதைப் பற்றி எதுவும் சொல்லவில்லை" என்றார் சுருக்கமாக!

—ஊர்சுற்றி

# மக்கள் கருத்து

## 1972-ம் ஆண்டின்பின்னரும் ஜி. ஜி. ஆதரித்தாரா?

24 4-78 வெளியான மக்கள் கருத்தில் தமிழ்க்காங்கிரஸ் ஆரம்பம் முதல் இன்றுவரை ஒற்றையாட்சியையே வலியுறுத்தி வருகின்றது என்று திரு. இளங்கோவன் என்பவர் கூறியுள்ளார். அவ்வாறாயின் தமிழீழமே முடிந்த முடிபாக ஏற்றுக்கொண்ட கூட்டணியில் தமிழ்க்காங்கிரஸ் ஏன் அங்கம் வகித்தது? அத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டுத் தலைவராக இருக்க ஜி. ஜி. ஏன் சம்மதித்தார்?

தமிழரசுக்கட்சியின் வேகமான வளர்ச்சி, போராட்டங்கள், சத்தியாக்கிரகங்கள், ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டமை, சிங்களக்காடையர் வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் கிழக்கு மாகாண மக்கள் ஓரணியில் நின்று தமிழ்க்காங்கிரசின் ஒற்றையாட்சிக் கொள்கையை அறவே நிராகரித்தமை, வட மாகாணத்தில் காங்கிரஸ் கோட்டைகளாகவிருந்த பல தொகுதிகள் தமிழரசுக் கட்சியிடம் பறிபோனமை, 1970 தேர்தலில் ஜி ஜிக்கு ஏற்பட்ட படுதோல்வி, 72ஆம் ஆண்டு சிங்கள பௌத்த குடியரசு ஏற்பட்டதன் பின்னர் தமிழ்மக்களிடையே ஏற்பட்ட எழுச்சி இவையெல்லாவற்றையும் அவதானித்த ஜி. ஜி. தொடர்ந்து தனது கட்சி பிழைக்கவேண்டுமானால் ஒற்றையாட்சிக் கோரிக்கையை வலியுறுத்துவதில் பயனில்லை என்பதை உணர்ந்து சமஷ்டிக் கோரிக்கையையும் சுயநிர்ணய உரிமையையும் மறைமுகமாக ஆதரிக்கத் தொடங்கினார்

ட்ரயல் அற்பார் வழக்கில் ஜி. ஜி, பேசும்போது தமிழ் மக்கள் இனியும் தொடர்ந்து சிங்கள மக்களுடன் வாழமுடியாது என்றும் இந்திய உபகண்டத்திலிருந்து பாகிஸ்தான் பிரிந்தநிலைமை இங்கும் உருவாகின்றது என்றும் கூறியுள்ளார். தனது இறுதி நாட்களில் தலைவர் அமிர்தலிங்கத்தைச் சந்தித்தபோது வட்டமேசை மாநாட்டின் மூலம் பிரச்னையை தீர்க்க முயலுங்கள் அது சாத்தியப்படாதவிடத்து பிரிவினையை நாடுங்கள் என்று கூறியுள்ளார் இன்று வட்டமேசை மாநாடு சாத்தியப்படவில்லை எனவே ஜி ஜி இன்று இருந்திருந்தால் நிச்சயம் பிரிவினையையே ஆதரித்திருப்பார்

தீவிர சிங்கள இடதுசாரிகள் கூட தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையைக் கொள்கைகளில் ஏற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் தமிழீழத்திலுள்ள எந்தத் தமிழனாவது ஒற்றையாட்சியை ஆதரிப்பது அறிவீனமாகாதா? கட்சித் தலைவர் திரு. சங்கரப்பிள்ளை எடுத்த துணிச்சலான

[5ம் பக்கம் பார்க்க]

## மணிவாக்கு

இதயமாகிய கோயிலைச் சுத்தமாக வைத்துக்கொள் அப்பொழுது தான் ஆண்டவன் அங்கு எழுந்தருளுவான்.

—சுவாமி சிவானந்தா

## சாதனைகள் சிறிதாவது நிலைக்கட்டும்

ஈழத்திலே சாதனைக் காற்று இப்போது சற்று பலமாகவே வீசுகிறது. பெருமைப்படவேண்டிய விடயம்தான் ஆனால் இலங்கையிலே ஒருவர் நிலை நாட்டிய சாதனையை வேறு ஒரு இலங்கையர் உடைத்துத்தள்ளிக்கொண்டிருக்கிறாரே, இது பெருமைப்படத்தக்க விடயமல்ல, வேதனைப்படவேண்டிய விடயம். ஆழிக்குமரன் ஆனந்தன் 'டுவிஸ்ட்' நடனத்தில் ஒரு சாதனையை நிலை நாட்டினார் அதன்பின் புற்றீசல்போல் சாதனை முயற்சிகள். வெற்றிகண்டவை மிகச்சில, தோல்வி கண்டவை பல இதற்குக் காரணம் என்ன? சரியான திட்டமின்றி, பயிற்சியின்றி முன்னேற்பாடு இன்றி சாதனை முயற்சி ஆரம்பிக்கப்படுவதுதான் ஆழிக்குமரன் ஒரு விளையாட்டு வீரன், வெறும் வீரன் அல்ல நிபுணனும்கூட. அவர் ஒரு சாதனையை ஆரம்பிக்குமுன் எத்தனை முன்னேற்பாடான நடவடிக்கைகளை எடுக்கிறார் என்பதனை நம் சாதனை முயற்சி வீரர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் உலக சாதனை வீரர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள், அவர்கள் எடுத்த பயிற்சிகள் போன்றவற்றை சாதனை வீரர்கள் அறிந்துவைத்திருக்க வேண்டும் சாதனை முயற்சியை தொடங்குமுன் உடல் நிலை சீதேஷ்ண நிலை என்பவற்றை கருத்தில் கொண்டு முயற்சியில் இறங்கினால் வெற்றி வாய்ப்புக்கு சாதகம் அதிகம் ஆனால் நம்மவர் பலர் இதைப்பற்றி அதிகம் கவலைப்படுவதில்லை ஏதோ ஆர்வத்தில் தொடங்கி பலர் கோட்டை விட்டுவிடுகிறார்கள் சரி எவ்வளவோ கஷ்டப்பட்டு உலக சாதனை நிலைநாட்டியாய்விட்டது. அந்தச் சாதனையை, அதை நிலைநாட்டிய வீரரிடம் கடைசி ஒரு வருடமாவது ஒட்டியிருக்க விடக்கூடாதா? ஆனந்தன்

[5ம் பக்கம் பார்க்க]

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவில் சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை புதன்கிழமை காலை நடைபெறவிருக்கிறது வியாழக்கிழமை மாலை தேர்த்திருவிழா நடைபெறும்

இன்று இரவு கோவை சவுந்தராஜன், எல். ஆர். ஈசுவரி - எல் ஆர் அஞ்சலி சகோதரிகள் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

(கொ-அ)

# பிரிட்டனின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும்

## பிரதமர் தட்சர் பேட்டி

லண்டன், மே 7

பிரிட்டனின் பாதுகாப்பை பலப்படுத்தும்பொருட்டு பாதுகாப்புச் செலவினத்தை அதிகரிக்கவேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சர் தெரிவித்தார்.

பிரதமராகப் பதவியேற்க முன்னர் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி அளிக்கையிலேயே திருமதி தட்சர் மேற்கண்டவாறு கூறினர். ரஷ்ய-அமெரிக்க கேந்திர ஆயுத கட்டுப்பாட்டு ஒப்பந்தத்துக்கு உள்ளடக்காத ரஷ்ய ஆயுதங்களுக்கு எதிராக பிரிட்டன் நவீன ஆயுதங்களை வைத்திருக்கவேண்டும் என்றும் திருமதி தட்சர் தெரிவித்தார்.

### ஜப்பானும் பாதுகாப்பை பலப்படுத்தவேண்டும்

ஜப்பானும் தமது பாதுகாப்பை பலப்படுத்தும் பொருட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அதிக செலவிடவேண்டும் என்றும் அவர் கூறினர். (இ)

# "முதலிடத்தை எதிர்பார்த்தவர் விடுதலை விரும்பிபோல் பேசுகிறார்"

## சங்கரப்பிள்ளை ராஜினமா குறித்து காங்கிரஸ் செயற்குழு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"தமிழினத்திற்கென சுதந்திர நாயகம் அமைக்கும் எந்த முயற்சியையும் தமிழ்க் காங்கிரஸ் ஒரு நாளும் எதிர்த்ததில்லை. சுதந்திர தமிழ் நாட்டை அமைக்கப்போராட்டம் ஒன்று தொடங்கப்படின் அப்போராட்டத்தில் முன்னணியில் நிற்க தமிழ்க் காங்கிரஸ் தொண்டர்கள் எப்போதும் தயாராக நிற்கிறார்கள்: ஆனால் விடிந்ததும் தமிழ் ஈழம் அமைப்போம் தாருங்கள் வாக்குகள் என்று சொல்லி வாக்குகளைப் பெறுவதற்காக தமிழ் மக்களை கூட்டணியினர்போல் ஏமாற்றவும் தயாராக இல்லை"

முன்னாள் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. தா. சங்கரப்பிள்ளையின் ராஜினமா தொடர்பாக தமிழ்க்காங்கிரஸ்செயற்குழுவிற்காக திரு. குமார் பொன்னம்பலம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

திரு. தா. சங்கரப்பிள்ளை அவர்கள் பதவியிலிருந்தும் கட்சியிலிருந்தும் விலகியதை அ. இ. த. காங்கிரஸ் செயற்குழு ஏற்றுக்கொள்கின்றது. தேர்தல் நடக்கும் இந்தச் சமயத்தில் அ. இ. த. காங்கிரசின் சத்துராதிகளின் தூண்டுதலின் பேரில் அல்லது வேண்டுகோளின் பேரில் திரு. சங்கரப்பிள்ளை தமிழ்க் காங்கிரசிற்கு மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் செல்வாக்கை மட்டம் தட்டும் நோக்கோடு திட்டமிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளார் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

விகிதாசார முறையில் நடைபெறும் தேர்தலில் தனக்கும் வேறு சிலருக்கும் வாய்ப்பினை எதிர்பார்த்து முதலிடம் தனக்குக் கொடுக்க வேண்டும் எனப் பிடிவாதம் செய்து கொண்டிருந்தவர். அதற்கு நியமனக்குழு இடம் கொடுக்காததாலும், ஏனைய வேட்பாளர்கள் விரும்பாததையாலும் தனது சுயநலத்தையும், ஏமாற்றத்தையும் முற்றாக மூடி மறைத்துத் தன்னை ஒரு விடுதலை விரும்பிபோல் பாசாங்கு செய்து கொண்டு கொள்கை முரண்பாடு காரணமாக விலகுவதாக அறிக்கைகள் விடுத்துள்ளார்.

தமிழ்க் காங்கிரஸ் இளம் சந்ததியினருக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவர்களை தேர்தலில் நிறுத்தியதையும் அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

கொள்கைவேறுபாடு இருந்திருந்தால் 1-4-79க்கும் 11-4-79க்கும் இடையில் நடந்த தேர்தல் நியமனக் குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டு நியமனங்கள் சம்பந்தமாக அக்கறைகாட்டி ஆலோசனை வழங்கியது ஏன்? தீர்மானங்களுக்கு உடந்தையாக இருந்தது ஏன்?

திரு. தா. சங்கரப்பிள்ளை 10-4-79ல் நடைபெற்ற நியமனக்குழுக்கூட்டத்திலும் கலந்து கொண்டார். அன்று வரை அவர் எவ்விடத்திலாவது கட்சி இனவிடுதலை விரோதநடவடிக்கைகளில் ஈடுபட்டதாகச் சொல்லவில்லை. அக் கூட்டத்தில் (10-4-79) சங்கரப்பிள்ளை பெயர்களை வெளியிடாது ஒரு பெயர்ப் பட்டியலைத்தான் வைத்திருப்பதாககுறிப்பாலுணர்த்தி அதனை நியமனக்குழு ஏற்கவேண்டுமென நிர்ப்பந்தித்தார். நியமனக்குழு பெயர்களை வெளியிடுமாறு கேட்டபோது அவ்விதம் செய்யத் திரு. சங்கரப்பிள்ளை மறுத்தார். அதன் பின்பு நியமனக்குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதை நிறுத்திக் கொண்டார். அவர் 12-4-79 இறுதிநியமனக்குழுக் கூட்டத்தில்கலந்து கொள்ளவில்லை. அன்றுகூட உப-தலைவர் திரு எஸ்.ஆர். கனகநாயகத்திற்கு அவர் அனுப்பிவைத்த கடிதத்திலும் அத்தகைய குற்றச்சாட்டுகள் எதனையும் இடம்பெறச் செய்யவில்லை. ஆனால் 19-4-79ல் பத்திரிகைகளுக்கு அனுப்பிவைத்த அறிக்கையில் இனவிடுதலையையும் இன உரிமைகளையும் முன்வைத்து உழைக்கும் இயக்கங்களை எதிர்க்க அல்லது பலவீனப்படுத்த கட்சி நிர்ப்பந்தித்தது என்று உண்மைக்கு மாறுகக் கூறும் திரு. சங்கரப்பிள்ளை அந்த ஒரு கிழமையினுள் நிகழ்ந்த அத்தகைய சம்பவங்கள்தான் என்ன என்பதனை வெளிப்படையாகக் கூறுவாரா?

அ. இ.த. காங்கிரசில் இருந்து சந்தர்ப்பவாதிகள் துரத்தியடிக்கப்பட்டு புத்துணர்வுடன் இளமைத் துடிப்புடன் செயல்பட்டு வருகின்றது. அண்மைக் காலங்களில் அது பல்வேறு இடங்களில் நடத்தி வந்த கருத்தரங்குகளிலும் பகிரங்கக் கூட்டங்களிலும் அரசாங்கத்தின் தமிழினத்திற்கு எதிரான போக்கினை ஒழிவு மறைவு இன்றி பகிரங்கமாகவே கண்டித்துவந்துள்ளது. அரசாங்கத்தைக் கண்டித்து செயற்குழுபல தீர்மானங்களை எடுத்துள்ளது. காங்கிரஸ் காட்டிய எதிர்ப்பினால்தான் மாவட்ட மந்திரிப்பதவிக்குப் பேரம் பேசிய கூட்டணியினர் மாவட்ட மந்திரிப்பதவிகளை ஏற்க முடியாமல் போனது. இன்றைய அரசின் தரப்படுத்தலை எதிர்த்துக்குரல் கொடுத்த முதல் கட்சி காங்கிரசே. தரப்படுத்தலை எதிர்த்து மாணவர் நடத்திய போராட்டத்தையும் இளைஞர் பேரவை நடத்திய போராட்டத்தையும் கூட்டணியினர் ஆதரிக்காது ஒதுங்கிய வேளையில் முழுமனத்துடன் ஆதரித்த கட்சி காங்கிரஸ். இப்படிப் பகிரங்கமாக அரசாங்கத்தை எதிர்க்கும் கட்சியை அரசாங்கத்துடன் தொடர்புபடுத்துவது கேவலமான அரசியல் தந்திரமாகும் எமது அரசாங்க எதிர்ப்புக் கொள்கை காரணமாகவே இணைச் செயலாளராகவிருந்த ஒருவர் எம்மை விட்டு விலகியதை நாடறியும். (க)

## இன்று திருவிழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கு சிவகாமி அம்மன் கோவில் மணவாளக் கோலம் திருவிழா இன்று நடைபெறுகிறது.

பகல் விசேஷ அபிஷேகமும் இரவு மணவாளக் கோலமும் முடிசூட்டு வைபவமும் திருவூஞ்சலும் நடைபெற்று, அம்பாள் விநாயகர்சகிதம் உள்வீதி வலம் வருவார். தொடர்ந்து காணிக்கை செலுத்தும் வைபவம் இடம் பெறும். (அ)

அணுசக்தி பாவனை

# வாஷிங்டனில் 65 ஆயிரம்பேர் ஆர்ப்பாட்டம்

வாஷிங்டன், மே 7

அமெரிக்க அணுசக்தி பாவனைக்கு எதிராக 65 ஆயிரம் அமெரிக்கர்கள் நேற்று வாஷிங்டனில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

பென்சில்வேனியாவிலுள்ள அணுசக்திநிலையம் ஒன்றில் அணமையில் ஏற்பட்ட விபத்தையடுத்து அப்பகுதியில் கதிரியக்கம் பரவியதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

அணுசக்தியை வர்த்தக நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதை நிறுத்தவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர். (இ)

# ரொடீஷிய கறுப்பர் ஆட்சியை பிரிட்டன் அங்கீகரிக்கும்?

லண்டன், மே 7

ரொடீஷியாவின் புதிய கறுப்பர் இன ஆட்சியை பிரிட்டன் அங்கீகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரொடீஷியப் பிரதமர் திரு. இயன்ஸ்மித் ரொடீஷியாவின் புதிய சிம்பாவே ஆட்சியை அங்கீகரிக்குமாறு பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளதை அடுத்து இவ் விவகாரம் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்க கமிட்டி ஒன்றை புதிய வெளியுறவு அமைச்சர் திரு. கரிங்டன் பிரபு நியமித்துள்ளார்.

இக் கமிட்டி தனது முடிவை அறிவித்ததும் அநேகமாக பிரிட்டன், ரொடீஷிய கறுப்பு இன ஆட்சியை அங்கீகரிக்கும் என திரு. கரிங்டன் பிரபு தெரிவித்துள்ளார். (இ)

உணவில் நஞ்சு:

## 500 குழந்தைகள் ஆஸ்பத்திரியில்

சென்னை மே 7

வியாசர் பாடியில் நேற்று நடைபெற்ற சர்வதேசசிறுவர் ஆண்டை ஒட்டிய வைபவம் ஒன்றில் கலந்துகொண்ட குழந்தைகள் உட்கொண்ட உணவில் நஞ்சு கலந்திருந்ததால் சுமார் 500 குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



'அம்புஷ்'

கம்பளப் புழுக்கள் உங்கள் பயிர்களை அழிக்க முன்பு அவற்றை அழிக்கிறது.

உங்கள் மிளகாய், வெங்காயப் பயிர்களைப் பாதிக்கும் பொருட்டுச் சந்துக் குத்தி, இஸ்புஸ்னும சகம்பளப் புழுக்கள், அனைத்தையும் உடனே அழிக்க, விரைந்து செயலாற்றும் அம்புஷ் தெளியுங்கள். அம்புஷ் நெடுங்காலம் வலிமையுடன் நிலைத்து நிற்பதால், அடிக்கடி மீண்டும் மருந்து தெளிக்கும் தேவையை அது தவிர்க்கிறது. உங்கள் மிளகாய் வெங்காயப் பயிர்களைப் பொருட்டுச் சந்துக் குத்தி, மற்றும் இருமிப் பீடைகளிலிருந்து பாதுகாக்க அம்புஷ் பாவியுங்கள்.

CIC கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்

த. பெ. எண் 352, கொழும்பு

தொலைபேசி: 28421

TAL 5148

**Rio** Phone : 7607 GRAND RELEASE
Daily 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 p m.
(Jaffna) JIM BROWN in
**SLAUGHTERS BIG RIP OFF**
(Adults only)

அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. 3வது ஹவுஸ்புல் வாரம்
தினசரி 10-30, 2-30, 6-15, 9-45
**ஸ்ரீதர்** (யாழ்நகர்) சிவாஜி, பானுமதி, தங்கவேலு நடித்த
**அம்பிகாபதி** (புத்தம்புதிய பிரதி)
நடனங்கள் வண்ணக் கலரில்...
பார்க்கத் தவறியிருந்தால் இன்றே பார்த்து மகிழவும்
குறிப்பு : யாழ். நகரில் இதுவே கடைசித்தடவையாக திரையிடப்படுவதால் ஏமாற்றத்தை தவிர்க்க முந்துங்கள்.

**SHANTHI** — JAFFNA — Phone : 7642
Daily 5 shows - Last Day 10-5-79
**" HANNIE CAULDER "**
Scope — Color — Adults Only
12-5-79 'GORA AUR KALA'—HINDI —Colour

19-வது வாரம்
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) போன்: 480 தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் **பிரேம்நாத்**
(சினிமாஸ்கோப் கலர்)

**ராஜா** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா, சௌகார்ஜானகி நடித்த
**ஒளிவிளக்கு** ஈஸ்மன் கலர் புதிய பிரதி

**ராணி** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சரோஜாதேவி - ரங்கராவ்
**குலவிளக்கு** (புதிய பிரதி)

**REGAL** (Jaffna) Daily 4-30, 7-00 & 9-10 p.m. only
3rd CROWDED WEEK
David Carradine - Veronica Hamel
in
**CAR QUAKE**
(Action - Thriller) (Color)
பயங்கர கார் ஓட்டங்கள் - சண்டைகள் நிறைந்தபடம்

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) தினசரி: 2-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு 10-30, 2-30 6-30 & 9-45
ரஞ்சன் - அஞ்சலிதேவி
**நீலமலைத் திருடன்**
(புதிய பிரதி)

**லிடோ** (யாழ்.நகர்) போன்: 7628 தினசரி 4 காட்சிகள்
**சொந்தம்**

தினசரி 4 காட்சிகள்
**மனோகரா** (யாழ்நகர்) சிவாஜி—சாவித்திரி நடித்த
**வடிவுக்கு வளைகாப்பு**
(புதிய பிரதி)

# திரு. செல்வநாயகம்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

எழுத்தில் விஷயங்களைப் பற்றி குறித்து அனுப்பாமல் விடுவது திருப்தியானதுபோல் சிறியேனுகிய எனக்கு தோற்றவில்லை. பொதுவாக தமிழ்மக்களும் எங்கள் பெருந்தலைவர்களும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் இன்னும்யோசிக்க வேண்டிய விஷயமாக மிகமன் ருட்டமாகவும் மதிப்புடனும் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தருணத்தில் திரு எஸ். ஜே. வி செல்வநாயகம் அவர்கள் எனக்கு எழுதிய கடிதங்களில் ஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

"என தருமை சிவா
உங்கள் கடிதம் கிடைத்தது. நீங்கள் எழுதிய விஷயங்கள் எல்லாவற்றையும்குறித்துக்கொண்டேன். அந்த விஷயங்கள் ஒரு புது அரசியல் அமைப்பை சமைக்கிறபொழுது நாங்கள் அவர்களை கவனிக்கவேண்டும்.

உங்கள் அன்புள்ள
S. J. V. செல்வநாயகம்"

(இக்கடிதம் ஆங்கில தட்டெழுத்துப் பதிப்பிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது)

இதுதிற்க திருவாளர் செல்வநாயகம் இருக்கும் பொழுது அவரும் வேறும்சில தமிழ் மக்களும் அடியேன் உட்பட தமிழருடைய கஷ்டநிலையை உணர்ந்து "தமிழர்கல்வி பொது நலக் கழகம்" எனும் ஸ்தாபனத்தை தொடக்கினோம். அந்தக் கழகத்தில் முக்கியமான பொறுப்புகளை திருவாளர் செல்வநாயகம், டாக்டர் இ எம் வி. நாகநாதன் அவர்களை ய தாய்மாமனார் திரு. ஏ. ஜே ஆர் வேதவனம் (கல்வி நிபுணர்) திரு எஸ் சோமசுந்தரம் (சட்டநிபுணர்) அவர்களின் மேலும் வேறு சிலரின் மேலும அடியேன் உட்பட சனங்கள் நியமித்தார்கள் திருவாளர் செல்வநாயகம் அவர்களும் நானும் இப்பொழுது ஜனாதிபதியாக இருக்கும் திரு ஜயவர்த்தனா அவர்களையும் செனட் தலைவர் ஏ. ரட்னாயக்கா அவர்களையும் சந்தித்து எங்கள் தமிழருடைய கல்வி சம்பந்தமாகிய கஷ்டங்களைப்பற்றி விளக்கினோம். அவர்கள் இருவரும் திரு செல்வநாயகத்தின் வார்த்தைக்கு பெருங் கவனத்துடன் மதிப்புக் கொடுத்து கல்வி அமைச்சுடன் ஒரு பேட்டிக்கு ஒழுங்குபண்ணினார்கள். தமிழ் மக்கள் சார்பாக ஒருகுழு பேட்டி காண திரு. செல்வநாயகம் தலைமையில் அடியேன் உட்பட அமைச்சை சந்தித்தோம். அமைச்சு அலுவலகம் முழுவதும் பியூன் தொடங்கி பெரியவர் உட்பட மிக மதிப்பாக திரு. செல்வநாயகத்தை கனம்பண்ணி எங்கள் வார்த்தைகளை கவனித்து குறித்துக் கொண்டனர் எங்கள் குறைகளை நிவர்த்தி செய்வதாகவும் கூறினார்கள். நாங்கள் திரும்பி வரும் நேரத்தில் கடும்மழையும் பெய்யத் தொடக்கியது. அப்பொழுது நாம் மறக்கமுடியாத மாதிரி திரு. செல்வநாயகம் ஒரு இடத்தில் இருந்து கொண்டு காரில்லாத ஆட்கள் தன்னுடைய காரில் ஏறி முதல்போகட்டும் என்றும் தான் கார் திரும்பி வந்ததன் பின் ஆறுதலாக விடு போகலாமென்றும் சொன்னார்கள். அந்தக்காலத்தில் எங்கள் தலைவர் சரீர நிலை மிக பாதிக்கப்பட்டிருந்தது. நடக்கவோ பேசவோ முடியாத நிலைமை. தமிழர் நிலைமையையும் தலைவருடைய சுகயீனங்களையும் அவருடையபிடிவிடாதகடமை நோக்கங்களையும் மற்றவருக்கு காட்டிய கருணையையும் நினைத்து அடியேனுக்கு கண்ணீர் வந்தது. அப்படியே அந்த சந்தர்ப்பத்தை நினைத்து இப்பொழுதும் கண்ணீர் வருகிறது.

திருவாளர் செல்வநாயகம் அவர்களுக்கும் அடியேனுக்கும் இலங்கை சட்டக்கல்லூரியில் ஒரு ஆசிரியர் இருந்தார்கள். சட்டநிபுணத்துவத்திலும் சமய பக்தியிலும் மிகச்சிறந்தவர். அந்த ஆசிரியர் "மனிதர் சீவியத்தில் இவ்வுலகில் கண்ணீரும் கஷ்டமும் மிக முக்கியமானது. கண்ணீரும் கஷ்டமும் இல்லாத சீவியம் ஒரு சீவியமல்ல" என்று சொல்வார்கள். அந்த ஆசிரியர் இஸ்லாமிய மார்க்கத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ யோகசுவாமிகளுக்கு மிக மதிப்பு வைத்திருந்தார்கள். அந்தஆசிரியர் ஜஸ்டிஸ் எம். ரி. அக்பர் சுப்ரீம் கோர்ட் நீதிபதியாய் பின்னர் உத்தியோகம் பார்த்தார்கள். அவர்கள் சொன்ன புத்திமதி அடியேனுக்கு மனதில் எப்பொழுதும் இருந்து வருகிறது. அந்த நேரத்திலும் நினைவு வந்தது.

அடியேன் இந்த விடயங்கள் எல்லாவற்றிலும் காரியதரிசியாக இருந்தும் அந்தச் சங்கத்தின் ஸ்தாபகராக இருந்தும் பங்கு பற்றிய அனுபவத்தை வைத்து இக்குறிப்பை எழுதுகிறேன்.

பேட்டியின் பின் திரு செல்வநாயகம் என்னை நோக்கி நாங்கள் செய்யவேண்டிய கடமையை செய்வோம். மிகுதியை மேலே இருக்கும் கடவுள் பார்த்துக்கொள்வார். அநுகூலத்தைப் பற்றியோ தோல்வியைப் பற்றியோ நாங்கள் யோசிக்கத்தேவையில்லை. இந்த அடிப்படை யோசனைதான் எங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் எக்காலமும் எல்லாவிடயத்திலும் இருக்கவேண்டும் என்று சொன்னார்.

முன்னொரு காலத்தில் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் ஸ்தாபிடபதில் திரு. செல்வநாயகமும் அடியேனும் பங்குபற்றினோம். அவர்களும் அடியேனும் முன் குறிப்பிட்ட குறிக்கோளை மனதில் வைத்து ஒவ்வொருவரும் எங்கள் அபிப்பிராயபடி தொண்டு புரிந்துவந்தோம். அந்த ஸ்தாபனத்தில் அவர் ஒரு முக்கிய இடம் பெற்றிருந்தார்கள் அடியேன் இணைக்காரியதரிசியாக கடமை புரிந்தேன்

திரு. செல்வநாயகம் அவர்கள் அரசாங்க மந்திரிமாரையும் உத்தியோகஸ்தர்களையும் பொதுவிடயங்களைப் பற்றிக் கண்டார்கள். அவர்கள் காட்டிய வழியை இவ்விடயத்தில் இப்பொழுது எங்கள் தமிழ்த் தலைவர்கள் பின்பற்றுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

## 1972ம்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

விவேகமான நேர்மையான முடிவு தமிழ்ப்பற்றுள்ள எல்லாத் தமிழர்களாலும் பாராட்டப்படக் கூடியதே.

திரு. இளங்கோவன் தமது கருத்தில் மேலும் கூறுகையில் தமிழ்க்காங்கிரஸ் இடபோது ஒருசில அங்கத்தவர்களைக் கொண்டிருந்தாலும் சீனக் கம்யூனிஸ்ட்கட்சி ஆரம்பத்தில் 12 உறுப்பினர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு பிற்காலத்தில் பெருவளர்ச்சி கண்டதுபோல் காங்கிரசும் வளர்ச்சி காண முடியும் என்ற கருத்தை முன்வைத்துள்ளார். சீனக்கம்யூனிஸ்ட்கட்சி மேலும் மேலும் வளர்ந்து கொண்டு போகின்றதே தவிர அதன் வளர்ச்சியில் எவ்வித தேய்வும் ஏற்படவில்லை. 1949ல் 12 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த தமிழ்க் காங்கிரஸ் 1972ல் 2 உறுப்பினர்களைத்தான் கொண்டிருந்தது எவ்வாறு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியையும் தமிழ்க் காங்கிரசையும் ஒப்பிட முடியுமா?

எஸ். ஆர். மகேந்திரன்
அல்வாய்.

## சாதனைகள்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

'டுவிஸ்ட்' நடனத்தில் சாதனையை நிலைநாட்டினார். அதனை வேறொரு வீரர் உடைத்தெறிந்தார். அந்த வீரரின் சாதனையை நசீர் உடைத்தார். நசீரின் சாதனையை கொடிகாமம் இளைஞர் ஒருவர் உடைத்தெறிந்தார். ஏன் இந்தப் போட்டி? உலகத்திலே சாதனை நிலை நாட்ட 'டுவிஸ்ட்' நடனம் ஒன்றுதான் இருக்கிறதா? ஒரே சாதனையை பல இலங்கையர் முறியடிப்பதிலும் பார்க்க, பல சாதனைகளை பல இலங்கையர் செய்தால் நமக்குப் பெருமையாகவும் இருக்கும். சாதனை வீரருக்கும் பெருமையாக இருக்கும். ஒரு சாதனை வீரரின் சாதனைப் பெருமையை ஒரு வருடம்கூட அவரிடம் ஒட்டியிருக்க விடாமல் பறிப்பது அவரின் வேறு சாதனை ஆர்வத்துக்குத் தடைபோடுவதாய் முடியும். எனவே சாதனை வீரர்களே பெற்ற சாதனையை அதை நிலை நாட்டியவரிடமே சிறிது காலம் விட்டுவிடுங்கள். வேறு சாதனையின் முயற்சியில் ஈடுபடுங்கள். அது உங்களுக்கும் பெருமை, நாட்டிற்கும் பெருமை.

- வடகோவை
வரதராஜன்.

**வெஸ்லி** (சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்-சந்திரகலா
**காலங்களில் அவள் வசந்தம்**

கடைசி வாரம்
**நாகம்ஸ்** (கன்னாகம்)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - மஞ்சுளா
**உத்தமன்**

## தடுக்கி விழுந்தவர் மரணமானார்

(யாழ்ப்பாணம்)

சைக்கிளில் சென்ற ஒருவர் கல தடுக்கி விழுந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்

இவ்விபத்து நல்லூர்-அரசடியில் நடைபெற்றது.

இராசாவின்தோட்டத்தைச் சேர்ந்தசோமரத்னு (41வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவர். மேதினத்தன்று நண்பகல் அரசடிவீதியில் இவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது கல் தடக்கிவிழுந்து பலத்த காயத்திற்குள்ளானாராம். விபத்துக்குள்ளான இவரை இவரது நண்பர்கள் முதலுதவிச் சிகிச்சையளித்து விட்டு இராசாவின் தோட்டத்திலுள்ள இவரது வீட்டிற்கு அழைத்துச்சென்றனராம். அப்போது சோமரத்னவின் தலையிலிருந்து இரத்தம் பெருக்கெடுக்கவே யாழ். ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அவர் மரணமானார் என மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். குற்றத் தடுப்புப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

பதில் மரணவிசாரணையதிகாரியும், பதில் நீதிபதியுமான எஸ். அமிர்தலிங்கம் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்

(கொ)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# "தமிழரிடமிருந்து இஸ்லாமியரை பிரிக்கமுடியாது"

— பண்டிதர்

[யாழ்ப்பாணம்]

"தமிழர் மத்தியிலிருந்து இஸ்லாமியரைப் பிரிக்கமுடியாது என்பதை இஸ்லாமியர் எல்லோரும் இன்று உணர்ந்து விட்டனர். இஸ்லாமியஇனம் விழித்துவிட்டது. அவர்களை யாரும் ஏமாற்றிவிடமுடியாது".

இவ்வாறு சலட்டி அம்மன் கோவில் முன்றலில் நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்ஊர்காவற்றுறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் கூறினர்.

திரு பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பண்டிதர் தொடர்ந்து கூறியதாவது:

"இம்மாதம் 19ம் திகதி நடைபெறவிருக்கும் யாழ். மாநகரசபைத் தேர்தலின்சரித்திரத்திலே இதுவரை நடந்திராதபடி தமிழர் விடுதலைக்கூட்டணியினரால் நிறுத்தப்பட்டிருக்கும் 23 வேட்பாளர்களையும் ஒருமுகமாக யாழ். மாநகர சபைக்குத் தெரிவு செய்து அனுப்பிவைக்க வேண்டும். நேர்மையான சேவைமனப்பான்மையுடைய அபேட்சகர்களையே கூட்டணிநிறுத்தியுள்ளது.

"தமிழர் கூட்டணியால் நியமிக்கப்பட்ட 14 அங்கத்தவர்களை ஒன்றாகப் பாராளுமன்றத்திற்கு அனுப்பிய பெருமையைப் பெற்றது வடபகுதியே.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து பல சலுகைகளையும் பெற்று சுகபோகங்களை அனுபவித்தவர்கள், இன்று அக்கட்சி பதவி இழந்ததும் நிறத்தை மாற்றிக்கொண்டு இன்று வாக்குக்கேட்கவந்துள்ளனர். தான் சார்ந்துநின்ற கட்சிக்கே துரோகம் செய்த இவர்கள் மக்களுக்குத் தொண்டு செய்யப்போகிறார்களாம்.

### விஸ்வநாதன் பேச்சு

திரு ஆர். விஸ்வநாதன் பேசுகையில் கூறியதாவது:

"கடந்த பத்துஆண்டுகளின் பின் இத்தேர்தல் நடைபெறுகிறது வீதிகள் யாவும் சீர்கேடு அடைந்துள்ளன. இவற்றையெல்லாம் திருத்தி எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியுள்ளபடி நடந்து நாட்டைச் சீர்திருத்துவோம்".

தமிழர் கூட்டணியென்றிருந்தபெயரை தமிழர்விடுதலைக் கூட்டணியென்று மாற்றி அமைத்தவரே குமரர் ஜி ஜி. பொன்னம்பலம்தான் என்று கூறிய திரு. விசுவநாதன் அந்தக் கூட்டணியையே அழிக்க மகன் குமார் முற்படுகிறார் என்றார் சென்றபொதுத்தேர்தலில் தனக்கும்மற்றும் நாவலருக்கும் கூட்டணி ஆசனங்கள் ஒதுக்கித்தர வேண்டுமென்று பேரம்பேசிய திரு குமார் பொன்னம்பலம் இன்று கூட்டணியில் காங்கிரஸ்சேரவில்லை என்று கூறுவது வேடிக்கை என்றும் திரு. விஸ்வநாதன் கூறினர். [சேர்-அ]

## வட இலங்கை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயசிங்கம் ஞானசேகரன்.

ஆசிரியர் பகுதி

இரண்டாம் பிரிவு

மிருதங்கம்:

செல்வி சுந்தரகுமாரி சோமசுந்தரம்.

சாதாரண சித்தி

மிருதங்கம்:

பரமசாமி கிருபாகரன், துரைராஜசிங்கம் இராஜன், சுப்பையாபிள்ளை விக்னேஸ்வரராஜா. (முற்றும்)

## யாழ். மாநகரசபைத் தேர்தல்:

# வெங்காயம், மிளகாய், கிழங்குக்கு உத்தரவாதவிலை!

## ஐ. தே. கட்சியின் பாரிய திட்டங்கள்

[யாழ்ப்பாணம்]

"கமத்தொழிலை விருத்தி செய்வதற்குப் போதிய ஆக்கமும், ஊக்கமும் அளித்து வெங்காயம், உருளைக்கிழங்கு. மிளகாய் போன்ற உப உணவு உற்பத்தியாளர்களுக்கும் புகையிலை உற்பத்தியாளர்களுக்கும் தகுந்த ஆதாயம் அளிக்கக்கூடிய உத்தரவாத விலையை பெற்றுக்கொடுப்போம்."

இவ்வாறு யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கியதேசியக் கட்சியின் குழுவின் சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த விஞ்ஞாபனத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

### கடற்றொழில்

வேண்டிய இழுவைக் கப்பல்களும் (ரோலர்) இயந்திர வள்ளங்களும், வெளி இணை இயந்திரங்களும், கலங்களும், வலைகளும் அரசாங்க மானிய திட்டத்தின்கீழ் குறைந்த விலைகளில் வழங்கல்.

பனிக்கட்டித் தொழிற்சாலையும் குளிர் அறைகளும் அமைத்து சந்தைப்படுத்தும் வசதிகளும் செய்து கொடுத்தல்.

மீனவர்களுக்கு வசதியான வீடுகள் அமைத்துக் கொடுத்தல்.

மீன்பிடிப் பகுதிகளுக்குளாய் நீர்வசதி செய்து கொடுத்தல்.

வலைக்களவுகளை அறவே ஒழிப்பதற்கு அரசாங்க அந்தஸ்து பெற்ற விழிப்புக் குழுக்களை அமைத்து சட்டமூலம் வலைக்களவுகளை ஒழித்தல்.

மீன்பிடி இயந்திரங்கள், வலைகள், உபகரணங்கள் என்பவற்றைப் பெறுவதற்கு கொழும்பு சென்று அலையாமல் இருக்கும் பொருட்டு யாழ்ப்பாணத்தில் ஓர் விற்பனவு நிலையம் அமைத்தல்.

யாழ்ப்பாணப் பரவைக்கடலில் இருக்கும் வாய்க்கால்களை சேறு அகற்றி ஆழமாக்கி இரு மருங்கிலும் அடையாளக் குத்திகளை நாட்டி கலங்கள் இலகுவாகத் தடைகளின்றிப் போக்குவரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

கடல் அட்டைத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு மென்மேலும் கூடிய கடன் வசதிகளை அளித்து வெளிநாட்டுச் சந்தைப்படுத்தலை விஸ்தரித்தல்.

இலகுவான முறையில் கடற்றொழில் உபகரணங்கள் பெறுவதற்குப் புதிய திட்டங்களை வங்கிகளுடன் இணைத்து அமுல் செய்தல்.

சீநோர் ஸ்தாபனத்தை மேன்மேலும் விரிவாக்கித் தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதுடன், வேலையற்றோருக்கு வேலைவாய்ப்பளித்தல்.

### கமத்தொழில்

கமத்தொழிலை விருத்தி செய்வதற்குப் போதிய ஆக்கமும் ஊக்கமும் அளித்து வெங்காயம், உருளைக்கிழங்கு மிளகாய் போன்ற உபஉணவு உற்பத்தியாளர்களுக்கும், புகையிலை உற்பத்தியாளர்களுக்கும், தகுந்த ஆதாயம் அளிக்கக்கூடிய உத்தரவாத விலையைப் பெற்றுக் கொடுப்போம்.

### சுகாதார சேவை

யாழ். மாநகரசபை விஸ்தரிப்பு திட்டத்தின்கீழ் நகரத்திற்கு வேண்டிய வசதிகள் அளித்தல்.

மலசல கூடக்கழிவு வாய்க்கால்களை அமைத்து நகரத்தின் சுகாதாரத்தை மேலும் பாதுகாத்தல்.

கழிவுவாய்க்கால்களை அமைத்துக் கழிவு நீரைச் சிறந்த முறையில் அப்புறப்படுத்தல்.

### வைத்திய வசதிகள்

புற்று நோய் ஆஸ்பத்திரி அமைத்தல்.

அரியாலை, பாஷையூர், கொழும்புத்துறை, நாவாந்துறை, முஸ்லிம் வட்டாரம், கிட்டி, நரிக்குண்டு, தேவரிக்குளம், கொட்டடி, நல்லூர் ஆகிய இடங்களில் பிரசவமனையும், மருத்துவசாலையும் அமைக்கப்படும். மேற்கூறிய ஸ்தாபனங்களுக்குத் தகுதி பெற்ற வைத்திய கலாநிதிகளும் தாதிகளும் நியமிக்கப்படுவர்.

(மிகுதி நாளை வரும்)

# "பொய்ப்பிரசாரத்தினல் காங்கிரஸ் அழிந்துவிடாது"

## முதல் பிரசாரக்கூட்டத்தில் குமார்

[யாழ்ப்பாணம்]

"தேர்தல ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட கட்சி அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சி. அக்கட்சி உள்ளூராட்சித் தேர்தலிற்தான் போட்டியிட முடியும் என்றும், பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாதென்றும் மேடை மேடையாகப் பொய்ப் பிரசாரம் செய்யப்பட்டுவருகிறது. பொய்ப்பிரசாரங்களின் மூலம் தமிழனின் மூத்த கட்சியான காங்கிரஸ் கட்சியை யாராலும் அழித்துவிட முடியாது."

இவ்வாறு நேற்று முன்தினம் மாலை வண்ணை பெருமாள் கோவில் முன்றலில் நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் பேசுகையில் கூறினர்.

காங்கிரஸ் வேட்பாளர் திரு. செ. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் மேலும் குறிப்பிட்டதாவது:-

கூட்டணியினர் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தம்மை ஒன்றாகப் பாராளுமன்றம் அனுப்பினுல் மூன்று மாதத்தில் தமிழ்நாடு கொண்டுவருவதாகக் கூறினர்கள். தேர்தல் முடிந்து இவ்வளவு காலத்திலும் தமிழ்நாடு காண்பதற்கான போராட்டம் ஏதாவது செய்தார்களா?

"உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரின் வாக்குகளைப் பெறுவதற்காக மே தினத்தன்று யாழ் முற்றவெளியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில், அடுத்த மே தினக்கூட்டத்தை தமிழ் ஈழத்தில் கொண்டாடுவோம் என்று கூறினர்கள். தமிழ் ஈழம் அமைக்கப்போகின்ற கூட்டணியின் எம். பிக்களான திருநாவுக்கரசுவும், ஆனந்த சங்கரியும் எதற்காக ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் கணேசலிங்கத்தோடு பின்கதவு வழியாக அமைச்சர் சிறில் மத்தியூவைச் சந்திக்க வேண்டும் என்றும் திரு. குமார் வினு எழுப்பினர்.

கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் பீற்றர் கெனமனுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்து கொண்ட கூட்டணியினர் தாங்கள் கம்யூனிஸ்ட் கட்சியுடன் எதுவித ஒப்பந்தமும் செய்யவில்லை என்று தமிழ்ப் பத்திரிகையில் செய்தி வெளியிட்டவர்கள், ஏன் ஆங்கிலப் பத்திரிகையில் அச்செய்தியை வெளியிடத் தயங்குகிறார்களோ தெரியவில்லை என்றும் திரு. குமார் கூறினர்.

டாக்டர் ஏப்பிரகாம், திருமதி அந்தோனியா சுவாமிநாதர். திரு. மகேந்திரராசா மற்றும் பலரும் பேசினர்.

### வட்டாரத் தேவைகள்

கூட்டத்துக்குத் தலைமை வகித்த திரு. செல்லையா சுந்தரலிங்கம் பேசுகையில், பதினேழாம் வட்டாரத்தின் தேவைகள் பலவும் கடந்த 19 வருடங்களாகப் பிரதிநிதித்துவம் வகித்தவரினுல் கவனிக்கப்படவில்லையென்றும் அவற்றை நன்கு தெரிந்துள்ள தாம் அவற்றை நிறைவேற்றித் தருவதாகவும் உறுதியளித்தார். எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதாக வெளிநாடுகளில் நமது பிரச்னைகளை எடுத்துக்கூற வாய்ப்புக் கிடைத்துள்ளதாகக் கூறும் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் யாழ் மாநகரசபைக்கு 23 உறுப்பினர்களையும் கூட்டணியிலிருந்தே தெரிவு செய்யவேண்டுமென்று கேட்பது மாநகர சபையில் எதிர்க்கட்சியே வேண்டாமென்பதன் அர்த்தமா என்றும் திரு. சுந்தரலிங்கம்கேட்டார். [கொ-அ]

# "முஸ்லிம்களின்குடியிருப்பு வசதிகள் அதிகரிக்கப்படும்"

ஏ. ஜே. ராஜசூரியர்

(யாழ்ப்பாணம்)

"இந்நாட்டில் மிகவும் சிறுபான்மை மக்களாக வாழும் முஸ்லிம் மக்கள் தாம் வாழும் பிரதேசத்து மக்களோடு மிகவும் அந்நியோன்யமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்துகொண்டிருப்பதோடு தென் பகுதியில் தமிழை அழியவிடாது வளர்த்து வருகிறார்கள்."

இவ்வாறு சோனக தெருவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டாவது இளை திறப்பு விழாவில் திரு. ஏ. ஜே. இராஜசூரியர் பேசுகையில் கூறினர்.

கட்சிக் காரியாலயத்தை ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் திரு. எஸ். கணேசலிங்கம் திறந்து வைத்தார்.

திரு. இராஜசூரியர் மேலும் கூறியதாவது:

"வேலையற்று இருக்கும் முஸ்லிம் பிள்ளைகளுக்குத் தொழில்நுட்பப் பயிற்சி அளித்து வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும். இன்று யாழ்ப்பாணத்தில் வாழும் முஸ்லிம்கள் குடிசன நெருக்கத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்வதற்கு நல்ல வீடு இல்லை. போதிய இடமில்லை. போதிய காற்றோட்ட வசதியோ சுகாதார வசதிகளோ இல்லை. இம்முறை யாழ். மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி பெற்றால் பொம்மை வெளிக் குடியேற்றத் திட்டத்தை விஸ்தரித்து அதில் முஸ்லிம்களைக் குடியேற்றுவதோடு, வேறு நல்ல இடங்களிலும் முஸ்லிம் மக்கள் குடியேற்றப்படுவர். சுகாதார வசதி, குடிநீர் வசதி ஆகியவைகளும் செய்து கொடுக்கப்படும்" (கொ-அ)

## ராஜராஜேஸ்வரன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருந்தது தெரிந்ததே

நேற்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே பிரதி வாதிகளுக்கு நோட்டீஸ் உத்தரவு பிறப்பித்தது. [ம]


## மரண அறிவித்தல்

### திரு. J. மாட்டீன்

திரு. J. மாட்டீன் (இளைப்பாறிய ஆசிரியர்) 6-5-79ல் காலமானர் இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், ஊர்தம்மாவின் சகோதரரும், சகுந்தலா. செல்வநாயகம் (மதுபரிபாலனம்) நிர்மலா, துரைநாயகம், மதுரநாயகம், சமலா ஆகியோரின் அன்புத் தந்தையும். சேவியர் (P. H. I.), புஷ்பா ஆகியோரின் மாமனரும், புளோ, பூவா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (8-5-79) செவ்வாய்க்கிழமை மாலை 4-15 மணிக்கு 181, ஆஸ்பத்திரி வீதியிலிருந்து கொஞ்சேஞ்ரிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: மா. துரைநாயகம்.

181, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

2381

## மரண அறிவித்தல்

### திருமதி பாலரத்தினம் சாந்தமலர்

பாலரத்தினம் சாந்தமலர் காலமாகிவிட்டார். இவர் பாலரத்தினம் (உதவி அதிபர் டிறிபேக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சரவணமுத்து அவர்களின் அருமைப் புதல்வியுமாவார். அன்னாரின் இறுதிஆராதனை "சாந்தவாசா" சாவகச்சேரியில் செவ்வாய்க்கிழமை (இன்று) மாலை நான்கு மணிக்கு நடைபெறும். அறிவிப்பவர்; எஸ். எஸ். ஜெயரத்தினம்

நுணுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

2383


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மே மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/89-5/78 The Eelanaadu P B No: 49. Telegram: Eelanaadu Telephone: 289.